Written by Administrator
Monday, 15 June 2009 10:17 -

□□□□□□□□ 15.06.2009

நாடு முழுவதும் 10 லட்சம் வீடுகள்

ஏழை, நடுத்தர மக்களுக்கு மலிவு விலையில்

புதுடில்லி, ஜூன் 15-

நாடு முழுவதும் 10 லட்சம் வீடுகளை கட்டி, ஏழை, நடுத்தர மக்களுக்கு விற்பனை செய்ய புதிய திட்டத்தை அறிமுகம் செய்கிறது மத்திய அரசு.

இந்த திட்டத்துக்கு , ராஜிவ் காந்தி ஆவாஸ் யோஜனா" என்று பெயர். பொருளாதார தனித்த பிரிவினர், குறைந்த வருவாய்ப்பிரிவினர், நடுத்தர வருவாய்ப்பிரிவினர் பயன் படுத்தும் வகையில், 400 முதல் 1,200 சதுர அடி வரை பரப்புள்ள வீடுகள் கட்டித் தரப்படும்.

இந்த வீட்டை வாங்குவோருக்கு மிகக் குறைந்த வட்டியில் கடன் கிடைக்கும்; அரசு மானியமும், 50 ஆயிரம் ரூபாய் கிடைக்கும்.

இந்த திட்டத்தை நிவிராக செயல் படுத்த, மத்திய வீட்டுவசதி அமைச்சர் குமாரி செல்ஜா நடவடிக்கை எடுத்து வருகிறார். வீடுகளை கட்டித்தர தனியார் பங்களிப்பும் பெறப்படுகிறது. அதுபோல, வீடுக ளுக்கான நிலங்களை உடனுக்குடன் அளிக்கும்படி மாநில அரசுகளும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சேரிவில்லா இந்திய நகரங்கள் இன்னும் ஐந்தாண்டில் அமையும் என்று தன் உரையில் ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் அறிவித்தார். அவர் அறிவித்த திட்டம் தான் இப்போது செயல்படுத்த முழுமூமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்காக,மாநிலங்களில் போதுமான இடங்கள் ஒதுக்கப்பட்டதும், தனியாரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு வீடுகள் கட்டும் பணி ஆரம்பமாகும்.

மானியத்தில் கட்டப்படுவதால் ஏற்படும் வருமான இழப்பை சரிகட்ட, இந்த வீட்டு வளாகங்களில் வர்த்தக பயன் பாட்டுக்கு உரிய வகையில் கட்டப்பட்டு, அவை சந்தை விலையில் விற்பனை செய்யப்படும்.